## விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2014

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, 108 மற்றும் 111 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் ரூபா 12,281,632 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வெளிவாரி விரிவுரைக் கட்டணங்கள் | 3,091,055 | மீதி உறுதிப்படுத்தலும் விரிவான பட்டோலையும் |
| (ஆ) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | 2,263,452 | செலவினங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| (இ) | வளப் பங்களிப்பாளர் படி | 2,162,125 | செலவினங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| (ஈ) | கண்டிக்கும் பதுளைக்குமிடையே உத்தேச புதிய வீதியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்குரிய ஒருங்கிணைப்பு, மதியுரை மற்றும் ஏனைய படிகள் | 4,765,000 | செலவினங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| | | 12,281,632 | |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக உருவாக்கல் கட்டளையின் 11(h) மற்றும் I | நிறுவனத்தின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக உப விதிக் கட்டளைகள் தயாரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2015 மார்ச் 15 ஆந் திகதி வரை அந்த உப விதிக் கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய பிர/நிறுவனம்/11 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதம் | கற்கைப் படிகள் வாழ்க்கைச் செலவுப்படியாக கொள்ளப்படாமையினால், இந்த படிகள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஓய்வூதிய நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்புக்கும் உரித்தாக்கப்பட முடியாத போதிலும், அதற்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்து மேற்கூறப்பட்ட நிதியத்திற்காக நிறுவனத்தின் கல்விசார் பதவியணியினருக்காக ரூபா 243,846 கூட்டுத்தொகை பங்களிப்புப் பணம் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | கடன் பணத்தை மீள அறவிடும் போது உரிய வட்டியுடன் மாதாந்த தவணைப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் 2014 ஆம் ஆண்டின் மார்ச் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக கடன் பணத்தின் தவணைப் பணமான ரூபா 54,632 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் - 371(5) | முற்பண மீதியை மீளக் கையளித்தல், அது வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகம் தாமதிக்க முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 100,000 தொகையான முற்பணம் 2015 மார்ச் 15 ஆந் திகதி |

| | | |
|---|---|---|
| | | வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 02, 03, 04, 05, 06 ஆம் பிரிவுகள் | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பில் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் ரூபா 5,484,339 தொகையான கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 யூன் 14 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 95(02) ஆம் இலக்க மற்றும் 2003 சனவரி 29 ஆந் திகதிய PE/1/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற நிலையங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக பதவியணியினருக்கு கொடுப்பனவு செலுத்தும் போது அமைச்சரவை அல்லது திறைசேரியின் அங்கீகாரம் இருக்க வேண்டிய போதும் அவ்வாறான அங்கீகாரமின்றி இந்த நிறுவனத்தின் இணைப்புப் படியாக ரூபா 319,355 தொகையும், கௌரப் படியாக ரூபா 53,896 தொகையுமாக ரூபா 373,251 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2014 யூலை 01 ஆந் திகதிய DMS/1528(A) ஆம் இலக்க கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 2014 யூலை 17 ஆந் திகதிய 07/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரை விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் 23 உத்தியோகத்தர்களுக்கு படியாக ரூபா 713,873 தொகை திறைசேரி அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2010 யூன் 07 ஆந் திகதி 6/2010 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி பெற்றோல் மோட்டார் வண்டியொன்றுக்கு ஒரு கிலோ

மீற்றருக்குச் செலுத்த முடியுமான தொகை ரூபா 12 ஆக இருந்த போதிலும் இந்த நிறுவகத்தின் உத்தியோகத்தர்களிற்கு முறையான அங்கீகாரமின்றி கிலோ மீற்றரொன்றுக்கு ரூபா 25 படி வாகன வாடகை செலுத்தப்பட்டமையினால் ரூபா 64,779 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 29,062,240 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 23,227,021 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,835,219 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. வழங்கல் மற்றும் சேவைச் செலவினம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள் முறையே ரூபா 1,388,224 இனாலும் ரூபா 693,545 இனாலும் அதிகரித்ததைவிட கூடுதலான வேகத்தில் பாடநெறிக் கட்டணம் மற்றும் நானாவித வருமானங்கள் முறையே ரூபா 9,867,660 இனாலும் ரூபா 777,821 இனாலும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2014 இன் நிதிக்கூற்றுக்களுக்குரிய ரூபா 49,209,792 பெறுமதியான 29 நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்களுக்காக முறையான அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

ரூபா 5,729,728 கூட்டுத்தொகையான வெளித்தரப்பினர்களிடமிருந்து கிடைத்த 12 ஆராய்ச்சி நிதிய மீதிகள் 1 இற்கும் 6 இற்கும் இடைப்பட்ட வருட காலம் முதல் முன்கொண்டுவரப்படுகின்ற மீதிகளாக இருந்ததுடன் அவற்றை தீர்ப்பதற்கோ அல்லது உரிய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கோ பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆவது பிரிவின் பிரகாரம், சகல மிகைப் பணமும் நிலையான வைப்பு, திறைசேரி உண்டியல்களில் குறுங்கால வைப்புக்கள் அல்லது ஏனைய ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 19,938,274 தொகை மற்றும் இறுதியின் போது ரூபா 38,231,119 தொகையான மீதியும் 06 வங்கிக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 4.4 ஒப்பந்த நிருவகத்தில் குறைபாடு

நிறுவகத்தின் பணிப்பாளர் தனியார் நிறுவனமொன்றுடன் மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது பெறுமதிசேர் வரியுடன் ரூபா 712,803 பெறுமதியான அலுவலகத்தை பிரித்து வேறாக்கும் ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டிருந்தார். ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு 07 மாதங்கள் தாமதமாகியிருந்த போதிலும் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்தல் தொடர்பாக ஏதாவது தாமதம் ஏற்படுமாயின் அதற்காக அறவிடவேண்டிய தாமதக்கட்டணம் உடன்படிக்கையில் குறிப்பிடப்படாமையின் காரணமாக கொடுப்பனவு செய்யும் போது தாமதக் கட்டணமாக எந்த அறவிடல்களையும் மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினரில் வெற்றிடங்கள் முறையே 06 மற்றும் 08 கணக்காய்வுத் திகதியான 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் காணப்பட்டது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் மனிதவள திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

நீண்டகால இலக்குகள் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் தகவல்கள் செயல்நடவக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு செய்யப்பட்ட தரவுகளுடனும் ஒப்பிட்டு நாளாதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 06 விடயங்களில் 8 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையான வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் கூட்டிணைந்த திட்டம் ஆக்கபூர்வமான திட்டமொன்றாக அவதானிக்கப்படவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்படாதிருந்ததுடன், பேராதனை பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதி அமைச்சுச் செயலாளரின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் தங்களது நிறுவகத்திற்காக வருடாந்தம் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கை மற்றும் அவை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இலக்கிடப்பட்ட திகதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய அறிக்கைகள் இலக்கிடப்பட்ட திகதியின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீடு ஆண்டின் நோக்கத்தை நிறைவேற்றும் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதிடப்பட்ட செலவினத்தையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பீடு செய்தபோது 13 விடயங்களின் ரூபா 3,026,000 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக பற்றாக்குறையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையும், 16 செலவின விடயங்களில் ரூபா 10,151,000 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாதீட்டில் உள்ளடக்கப்படாத 05 செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,850,000 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டின் போது அதிகாரமின்றி செலவிடப்பட்டிருந்ததுடன் 02 செலவின விடயங்களுக்குரிய பாதீட்டின் மூலம் ரூபா 1,300,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எதுவித செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதிடப்பட்ட வருமானத்தையும் உள்ளபடியான வருமானத்தையும் ஒப்பீடு செய்தபோது 08 வருமான விடயங்களின் ரூபா 16,479,000 கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீட்டு அறிக்கையுடன் பாதிடப்பட்ட ஐந்தொகை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஊழியர் நிருவாகம்
(இ) ஆராய்ச்சிகள் மற்றும் மானியங்கள்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

-------------------------------------------------------------------------------------------
-------------------------------------------------------------------------